

# MSM களுக்கான H.I.V. கவுன்சிலிங்கில் பின்பற்ற வேண்டிய முறைகள்

## எம்.எஸ்.எம்களுக்கான எச்.ஐ.வி கவுன்சிலிங்கில் பின்பற்ற வேண்டிய முறைகள்.

## எச்.ஐ.வி கவுன்சிலிங் – வழிகாட்டி

பரிசோதனை மையம் மற்றும் கவுன்சிலிங் மையங்களில் அளிக்கப்படுபவை.

### முன்னுரை

பரிசோதனைக்கு முன்பு நடக்கும் கவுன்சிலிங்கில் எச்.ஐ.வி பரவுதல், தடுப்பு, எந்த நிலை என்பது பற்றி அறிவதால் ஏற்படும் நன்மைகள் பற்றிய தகவல்களை வாடிக்கையாளருக்கு அளிப்பதே பிரதான நோக்கமாகும். நோயாளியிடம் கவுன்சிலிங்கின் போது, வெளிப்படையான மொழியில், சரி தவறு என்று கணிக்காமல், தனிமையில் பேச வேண்டும். வாடிக்கையாளர் கேள்விகள் கேட்க, விவாதிக்க எந்த தயக்கமும் காட்டாத படி சாதகமான சூழல் இருக்க வேண்டும்.

பரிசோதனைக்கு பின்பு நடக்கும் கவுன்சிலிங்கில் எச்.ஐ.வி அபாயத்தை குறைக்கும் நடத்தை, நல்ல ஆரோக்கியமான பழக்கங்கள் பற்றி தெளிவுபடுத்த வேண்டும். கூடவே, வாடிக்கையாளரின் எச்.ஐ.வி தடுப்பு நடவடிக்கையும் விவாதிக்கப்படவேண்டும். எச்.ஐ.வி (+) என்றால், எச்.ஐ.வி தொடர்பான ஆரம்ப கவனிப்பின் நன்மைகளை விளக்க வேண்டும். துணைவர்களிடம் குறிப்பிட வேண்டியவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

பரிசோதனைக்கு முன்பு / பின்பு கவுன்சிலிங் அமர்வுகளில் கடைபிடிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கவுன்சிலர்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதால், இவை தெரிந்த விஷயங்களாக இருக்கக்கூடும். இவற்றை தனியாக வாடிக்கையாளரிடம், பரிசோதனைக்கு முன்பு அபாயம் பற்றிய மதிப்பீட்டை

செய்வது பெரிய அளவில் பயனளிக்காது. ஆனால், எந்த அளவு அபாயம் உள்ளது, எப்படி குறைப்பது என வாடிக்கையாளர் புரிந்து கொள்ள உதவும்.

இதற்கு முன்பு கவுன்சிலிங் வழிகாட்டியை கவுன்சிலர்கள் படித்திருக்கக்கூடும்.

மேலும் நகரத்தில் எந்தெந்த சேவைகள் கிடைக்கும் என்பதையும் ஏஜென்சி சரிபார்க்க வேண்டும். இது அரசு மற்றும் தனியார் அளிக்கும் எச்.ஐ.வி பரிசோதனை சேவையை உள்ளடக்கியதாகும். மற்றும்,

- தரம், நம்பகத்தன்மை, பொருத்தம்
- இந்த பரிசோதனை சேவை நம்பிக்கையை பாதுகாக்கக் கூடியதா
- எம்.எஸ்.எம்கள், ஹிஜ்ராக்கள், கோத்திகள் என பாரபட்சம் காண்பிக்கப்படுகிறதா.
- போதுமான, பொருத்தமான கவுன்சிலிங் சேவை இருக்கிறதா.
- மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறதா, அதன் செலவுகள்.
- எந்த ஆதரவு குழுக்கள் மற்றும் சுயஉதவி குழுக்கள் உள்ளன என்பவை முக்கியம்.

மற்ற சேவைகள் பற்றியும் ஆராய்ந்து, சேர்க்கப்பட வேண்டும். மது, போதை மருந்திலிருந்து விடுபடச் செய்யும் மையங்கள், உளவியல் சிகிச்சைகளும் சேர்க்கப்பட வேண்டும். சட்ட, மனித உரிமை சேவைகளையும் மதிப்பீடு செய்யவேண்டும்.

ஏஜென்சியிடம் பொருத்தமான பரிந்துரைக்கான தொடர்பு எண்கள், எச்.ஐ.வியுடன் வாழ்பவர்கள் கடைபிடிக்கவேண்டிய உணவு முறை, மருத்துவதேவைகள் அடங்கிய குறிப்பும் இருக்க வேண்டும்.

நகரில், நாட்டில் உள்ள பாசிட்டிவ் குழுக்களுடன் ஏஜென்சி இணைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஹிஜ்ராக்கள், கோத்திகள், ஒரின சேர்க்கை ஆண்கள், எம்.எஸ்.எம்கள் தேவைகளையொட்டிய நடவடிக்கைக்கான பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.

**பரிசோதனைக்கு முன்பு - கவுன்சிலிங்**

## 1. கவுன்சிலிங் அமர்வு துவக்கம்

அ. வாடிக்கையாளருக்கு ஆதரவான, நட்புடன் கூடிய சூழலை கவுன்சிலர் ஏற்படுத்த வேண்டும்.

ஆ. சொந்த பிரச்சனைகள், அபாயங்கள் பற்றி விவாதிக்க வேண்டும், வெளிப்படையாக பேச வேண்டுமேன்பதை வாடிக்கையாளரிடம் கூற வேண்டும்.

இ. விவாதம் ரகசியமாக இருக்குமென விளக்கவும்.

ஈ. எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றி வாடிக்கையாளருக்கு தெரிந்தவற்றை பேச ஊக்குவிக்கவும். நடத்தையை விமர்சிக்காமல், அவருக்கு ஆதரவாக பேசி, சாதகமான சூழ்நிலையை உருவாக்கவும்.

உ. எச்.ஐ.வி. கவுன்சிலிங் / பரிசோதனை செய்து கொண்டவரா என கேட்கவும்.

(i). ஏற்கனவே பரிசோதனை செய்து கொள்ளவில்லை என்றால், எச்.ஐ.வி பரவுதல், தடுப்பு பற்றி பேசவும்.

(ii). வெளியே தெரியாமல் எச்.ஐ.வி பரிசோதனை செய்யலாமென கூறவும். ரகசியத்தன்மை காப்பாற்றப்படுமென்றும் கூறவும்.

(iii). பரிசோதனை முடிவு ‘நெகடிவ்’ என்று வந்தால் அபாயம் உண்டு என்று தெரிந்தால் மீண்டும் பரிசோதனை செய்து கொள்ளும்படி கூறவும். 6

மாதங்களுக்குள் பரிசோதனை செய்து கொண்டிருந்தால் அதற்கு பின் நோய் தொற்றும் அபாயம் இல்லை என்றால் கவுன்சிலிங் செய்யவும். விரும்பினால் மறு பரிசோதனை செய்து கொள்ளும்படி கூறவும்.

(iv). எச்.ஐ.வி பாசிடிவ் என்றிருந்தால், வாடிக்கையாளர் பொருத்தமான சேவைகளை பெற்றாரா என உறுதிபடுத்திக் கொள்ளவும். இல்லையெனில் எங்கு சென்று சேவை பெற வேண்டுமென கூறவும். பொருத்தமான சுயஉதவி குழுவை அணுகுவதை உறுதி செய்து கொள்ளவும்.

## II. எச்.ஐ.வி தொற்றுதல் மற்றும் தடுத்தல்

### அ. எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றிய அடிப்படை தகவல் அளித்தல்

எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றி வாடிக்கையாளருக்கு என்ன தெரியும் என கேளுங்கள். எச்.ஐ.வி எப்படி எய்ட்ஸ் நோய்க்கு காரணமாக உள்ளது என கூறவும். எச்.ஐ.வி. தொற்று, உடலில் எதிர்ப்பு சக்தியை உடைக்கிறது. அதனால் நோயை எதிர்க்க முடியாது. எச்.ஐ.வி தொற்று என்பது எய்ட்ஸ் நோயாக மாற 10 ஆண்டு காலம் கூட ஆகலாம். எச்.ஐ.வி உள்ள அனைவருக்கும் எய்ட்ஸ் வருமா என்பது இன்னும் நிச்சியமாக, உறுதியாக கூறப்படவில்லை. எச்.ஐ.வி உள்ளவர்கள் நோயாளிகளாகத் தோன்றுவதில்லை. எச்.ஐ.வி தனக்கு இருப்பதே தெரியாதவர், வேறு யாருக்கும் அதை பரப்ப வாய்ப்பு உண்டு.

### ஆ. தொற்று பரவுதல் மற்றும் தடுத்தல் பற்றிய தகவல்கள்.

1. தொற்று இல்லாதவருடன் தொற்று உள்ளவர் குறிப்பிட்ட நடவடிக்கையில் ஈடுபடுவதால் எச்.ஐ.வி பரவுகிறது என விளக்கவும். தொற்று உள்ளவர்கள் மற்றவர்களுக்கு நோயை தொற்றச் செய்யமுடியும்.

- ஆணுறை அணியாமல் செக்ஸ் வைத்துக் கொள்வதால் (ஆசனவாய், பெண்குறி) அல்லது ஆணுறை சரியாக அணியாமலிருப்பதால்.

- பிறப்புறுப்புகளில் புண்கள் இருக்கும்போது, ஈறு ரத்தம் வடியும் போது, மாதவிடாயின் போது வாய்வழி புணர்ச்சியில் ஈடுபட்டால்.
- போதை மருந்து பழக்கம் உள்ளவர்கள் ஊசிகளை பகிர்ந்து கொள்வதால்.
- கர்ப்பிணிகள், தாய்ப்பால் கொடுப்பவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தொற்றச் செய்கின்றனர்.

2. பலருடன் உடலுறவு வைத்துக் கொள்வதால் எச்.ஐ.வி / எஸ்.டி.ஐ தொற்ற கூடுதலான வாய்ப்பு உண்டு. ஒரே ஒருவருடன் உறவு கொண்டாலும், அவருக்கு எச்.ஐ.வி இருந்தால், அவர் மூலம் தொற்றும்.

3. ஆசனவாய் / பெண்குறி புணர்ச்சிக்கு முழு அளவு ஆணுறைகள் அணிந்தால் நோய் தொற்றும் வாய்ப்பு குறையும். வாய்வழி புணர்ச்சிக்கும் ஆணுறை பயன்படுத்த வேண்டுமென விளக்குங்கள்.

இவைதவிர, ஆணுறைகள் எஸ்.டி.ஐ பரவுவதையும் தடுக்கிறது.

எந்த தடையும் 100 சதம் பாதுகாப்பு அளிக்காது. தொடர்ந்து ஆணுறை பயன்படுத்த, முறையாக பயன்படுத்த வற்புறுத்த வேண்டும். ஆணுறைகள் கிழியாமலிருக்க இளக்கிகளை பயன்படுத்த வேண்டும். செயல்முறை விளக்கம் அளிக்க வேண்டும்.

ஆணுறைகளை வாங்கி நீண்டகாலம் வைத்திருந்தால் கெட்டுப்போகும். அந்த ‘பாக்’ கில் போடப்பட்ட தேதியை பார்க்கவும். சூடான இடத்தில் வைப்பதை தவிர்க்கவும். பெட்ரோலியப் பொருட்களுடன் அதை பயன்படுத்தினால் கிழியும். ஒரு முறை பயன்படுத்திய ஆணுறையை மறுபடியும் பயன்படுத்தக் கூடாது. விந்து வெளியேறினாலும், இல்லை என்றாலும், வெளியே எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் விந்து தெறிக்கும் இவற்றையெல்லாம் கவுன்சிலிங் போது விளக்கவும்.

4. போதை மருந்துக்கு பயன்படுத்தப்படும் ஊசிகள் போன்ற பொருட்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது. ஊசிகள் மூலம் போட்டுக் கொள்வதை தவிர்க்கவும் ஊசிகள் சுத்தமாக இருக்க வேண்டும். தெருக்களில் விற்கப்படும் ஊசிகளை சுத்தப்படுத்த வேண்டும். நிறையபேருடன் ஊசிகளை பகிர்ந்து கொள்வதால் நோய் தொற்றும் அபாயம் கூடுதலாக உள்ளது. யாருடனும் ஊசியை பகிர்ந்து கொள்ளக் கூடாது. ஏனெனில் யாருக்கு எச்.ஐ.வி உள்ளது எனத் தெரியாது.

5. சாதாரணமாக தொடர்பு மூலம் எச்ஐவி பரவாது என விளக்கவும்.

- ✓ கை குலுக்குதல்
- ✓ ஒரே பாத்திரத்திலிருந்து உண்ணுதல், நீர் அருந்துதல்
- ✓ தும்மல், இருமல்
- ✓ பொது கழிப்பறையை பயன்படுத்துதல்
- ✓ நோய் தொற்று உள்ளவர் அருகில் இருந்தல் மூலம் பரவாது.

கண்ணீர், எச்சில், சிறுநீர் மூலம் எச்.ஐ.வி பரவுவதை நிருபிக்க ஆதாரம் இல்லை.

வாயில் புண் இருந்தாலே தவிர, முத்தமிடுதல், பாதுகாப்பானது என கருதப்படுகிறது. ஆழ்ந்து முத்தமிடுதல் வாயில் புண் இருந்தால் தொற்று அபாயம் உண்டு. ரத்தம் வாயில் உள்ளதை உறுதி செய்வது கடினம் (பிரஷ் மூலம் பல் துவக்கும் போது கூட ரத்தம் வரலாம்).

## III. எச்.ஐ.வி பரிசோதனை பற்றி விவாதித்தல்

### அ. வாடிக்கையாளரிடம் விளக்குதல்

ஊசி மூலம் போதை பழக்கம் உள்ளவர் செக்ஸில் ஈடுபடுவர்கள் எச்.ஐ.வி பரிசோதனை செய்து கொள்வது நல்லது. அதன் மூலம் தான் தொற்று உள்ளதா என கண்டு பிடிக்க முடியும்.

## ஆ) பரிசோதனை செய்து கொள்வதன் நன்மைகளை விளக்குங்கள்:

(i). பரிசோதனை முடிவு நெகடிவாக இருந்து, வாடிக்கையாளரும் அபாயமான செக்சில் 6 மாதங்கள் ஈடுபடாமலிருந்தாலும், அவருக்கு தொற்ற வாய்ப்பில்லை பொருத்த மென கருதினால் மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளச் சொல்லவும்.

(ii). தொற்று இல்லை எனில், அது ஏற்படாத வகையில் பாதுகாப்பு, தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட அறிவுறுத்துங்கள். (தடுப்பு நடவடிக்கை எப்படி என மீண்டும் கூறவும்).

(iii). பரிசோதனை முடிவு பாசிடிவாக இருந்தால், அவருக்கு எச்.ஐ.வி உள்ளது என்று அர்த்தம். இதை அறிந்து கொள்வது முக்கியம். அப்போது தான் சிகிச்சை மதிப்பீடு, ஆரோக்கிய வாழ்வு திட்டத்தை பின்பற்ற முடியும்.

வாடிக்கையாளருக்கு திருமணமாகி, மனைவி கர்ப்பிணியாக இருந்தால் / இளம் குழந்தைகள் இருந்தால்.

(iv). குழந்தைகளுக்கு பிரத்யேக மருத்துவ கவனம் தேவைப்படுகிறது. அதில்:

- அடிக்கடி ‘செக் அப்’ செய்து, எச்.ஐ.வி தொற்று உள்ளதா என உறுதி செய்தல்;
- பிரத்யேக தடுப்பு ஊசிகள் போடுதல் (எச்.ஐ.வி பாசிடிவாக இருந்தால்)
- தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் பொருத்தமான சிகிச்சை அளித்தல்.

## இ. பரிசோதனை முடிவை தெரிந்தது ஏற்படும் உளரீதியான விளைவுகள்.

முடிவு பற்றி எதிர்பார்ப்பு எல்லோருக்கும் உள்ள உணர்வுதான் எனக் கூறுங்கள். தேவைப்பட்டால் உளரீதியான ஆதரவு சேவை அளிக்கப்படும் என்று உறுதி கூறுங்கள்.

## ஈ. எச்.ஐ.வி தொற்று பரிசோதனையை பரிசீலனை செய்தல் - அதற்கான வழிவகைகள்.

(i). எச்.ஐ.வி பரிசோதனை என்பது ரத்தபரிசோதனை அதன் மூலம் ஒருவருக்கு தொற்று உள்ளதா என அறிய முடியும். எய்ட்ஸ் உள்ளதா என அறிய முடியாது. எய்ட்ஸ் இருப்பவருக்கு ரத்தபரிசோதனை செய்வதில்லை.

(ii). பரிசோதனை செய்து கொண்டால் முடிவுகள் தெரிய 3 வாரங்கள் ஆகும் என்று கூறுங்கள், முடிவு பரிசோதனைக்கு பின் உள்ள அமர்வில், சம்பந்தப்பட்ட நபரிடம் தான் அளிக்கப்படும்.

## IV. எச்.ஐ.வி கவுன்சிலிங் மற்றும் பரிசோதனை

அ. ரகசியமாக வைத்தல்: பரிசோதனை மற்றும் கவுன்சிலிங்கை ரகசியமாக வைப்பது மருத்துவ சேவைகளுக்கு ஏற்பாடு செய்ய உதவியாக இருக்கும். நோயாளியின் மருத்துவ பதிவேட்டில் பரிசோதனை முடிவுகள் எழுதப்பட்டிருக்கும். ரத்தம் பரிசோதிக்க அளிக்கும் போது கூட அதற்கு வரிசை எண்தான் தரப்படுமே தவிர, பெயர்தரப்படமாட்டாது.

ஆ. தனிப்பட்ட தகவல் எதையும் எப்போதும் அளிக்காமல் இருக்க வேண்டும். பதிவேடுகள் ரத்தம் மாதிரி (specimen) எண் மூலம் குறிக்கப்படுவதால், யாருடையது என்பதை கண்டுபிடிக்கஇயலாது.

## V. பாரபட்சம்

தனக்கு எச்.ஐ.வி இருப்பதை / அல்லது பரிசோதனை செய்வதை பற்றி மற்றவர்களிடம் தெரிவிக்கையில் கவனமாக இருக்க வேண்டும். இது தொடர்பான தகவல்கள் கிடைத்தால் மற்றவர்கள் பாரபட்சமாக நடத்தக்கூடும் வேலை பறிபோகும். குடும்பமே பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகும்.

## பரிசோதனைக்குப் பின் கவுன்சிலிங் – (செரோநெகடிவ்)

## I. பரிசோதனை முடிவு.

நோயாளி தானே நேரில் சென்று பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அ. பரிசோதனை முடிவுக்கு பின் கவுன்சிலிங் தொடங்கவும்

ஆ. முடிவு பதிவு செய்யப்பட்டுள்ளதை காட்டுங்கள்

இ. முடிவை அவர் எப்படி எதிர் கொள்கிறார் என்று சிறிது நேரம் கொடுத்துப்பாருங்கள். பின் அவர் தன் உணர்வுகளை / கவலைகளை வெளிப்படுத்த ஊக்கம் அளியுங்கள்.

ஈ. அவரது உடனடி பிரச்சனைகள் மீது கவனம் செலுத்துங்கள்.

## II. நெகடிவ் முடிவின் அர்த்தம் என்ன?

நெகடிவ் என முடிவு வந்தால், அந்த நபருக்கு நோய் தொற்றவில்லை என்று அர்த்தம்.

**கீழ்கண்டவாறு விளக்குங்கள்:**

அ. கடந்த 6 மாதங்களில் பாதுகாப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்திருந்தால், எச்.ஐ.வி தொற்ற வாய்ப்பு குறைவு. அல்லது வாய்ப்பிருந்தும் அவருக்கு தொற்றவில்லை.

ஆ. கடந்த 6 மாதங்களில் பாதுகாப்பற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால், தொற்ற வாய்ப்புள்ளது. ஆனால் எச்.ஐ.வி கிருமி உற்பத்தி ஆகாமல் இருந்திருக்கும். தொற்றுக்குப்பின் 6-12 வாரங்களில் கிருமிகள் உற்பத்தியாகும். சிலருக்கு 6 மாதங்கள் அல்லது அதற்கு மேலும் ஆகலாம்.

ஒரு சிலர் உடலில் நோய் தொற்றினாலும், கிருமிகள் உற்பத்தியாகாமல் இருக்கலாம். வாடிக்கையாளரின் பழக்க வழக்க அடிப்படையில், பொருத்தமான நேரத்தில் மீண்டும் பரிசோதனை செய்து கொள்ளும்படி கூறவும்.

இ. முடிவு நெகடிவாக இருந்தாலும் அவருக்கு நோய் தொற்றாது என அர்த்தமாகாது. எச்.ஐ.வி. வரும் அபாயம் இருக்கும் என விளக்கவும்.

## III. அபாயத்தை குறைத்தல்

தனிப்பட்ட முறையில் அபாயத்தை எப்படி குறைப்பது என முடிவு நெகடிவாக வரும்போது வாடிக்கையாளரிடம் கூறவும்.

அ. செக்ஸில் 'ரிஸ்க்' (அபாயம்) நடவடிக்கை வாடிக்கையாளரின் துணைவருக்கும், நீங்கள் பொருத்தமானது என கருதினால் அபாயத்தை குறைக்க கவுன்சிலிங் கொடுங்கள்.

துணைவரின் செக்ஸ் மற்றும் போதை பழக்கம் பற்றி நம்பகமான தகவல் பெரும்பாலும் கிடைப்பதில்லை. ஆணுறை இன்றி உறவு வைக்கக் கூடாது என வலியுறுத்த வேண்டும். இரண்டு பேரையும் பரிசோதித்து, இருவருக்கும் நெகடிவ் என முடிவு வந்து, இருவருமே பாதுகாப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது உறுதியானால் தான், அந்த முடிவை உறுதிப் படுத்தலாம்.

தங்கள் துணைவரின் நடவடிக்கைப்பற்றி உறுதியாக கூற முடியாது என்றால், அதைப்பற்றி, பேச வேண்டும். அதிக மற்றும் குறைந்த அபாயம் பற்றி விளக்க வேண்டும்.

1. முழுமையான அளவிலான ஆணுறை அணியாமல் ஆசனவாய் புணர்ச்சியில் ஈடுபடுதல்.

2. ஆணுறை இன்றி வஜைனா புணர்ச்சி.

3. ரத்த கசிவு, புண் இருக்கும் போது ஆணுறுப்பை வாய்வழி புணர்ச்சியில் ஈடுபடுதல்

4. ரத்த கசிவு, புண் இருக்கும் போது வஜைனாவில் வாய்வழியில் புணர்தல்.

## அ. போதை மருந்தும் அபாய நடவடிக்கையும்

போதை மருந்து பழக்கம் உள்ளவரிடம், ஊசிகளை பயன்படுத்துவது பற்றி கவுன்சிலிங் செய்வது அவசியம்.

1. போதை மருந்தை தவிர்த்தால், எச்.ஐ.வி தொற்றும் அபாயம் குறையாது.

2. போதை மருந்தை தவிர்ப்பது நல்லது.

## ஆ. இருப்பினும் அதை பயன்படுத்துவோர் முக்கியமாக கவனிக்க வேண்டியவை :

1. ஊசிகள், மற்ற பொருட்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது.
2. ஊசிகளை சுத்தம் செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும்.
3. போதையிலிருந்து விடுபடும் திட்டங்களில் பதிவு செய்து, பயன் பெறும்படி வாடிக்கையாளரை ஊக்குவிக்க வேண்டும்.

## இ. இதர போதை மருந்து நடவடிக்கை

கீழ்கண்டவற்றை பயன்படுத்தும் போது, பாதுகாப்பான செக்சில் ஈடுபடுவதில் உள்ள சிரமங்களை குறிப்பிடுங்கள்.

- மது அருந்துதல்
- மாரியுவானா

- மயக்கமளிக்கும் பொருட்கள் (டென்ஷனை குறைப்பவை (downers).
- ஊக்கமளிக்கும் பொருட்கள் (Uppers)
- மதிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் பொருட்கள் (Hallucinogens)
- கொக்கெய்ன், க்ராச்
- ஹெராயின்

கொக்கென் பயன்படுத்துவது - முகர்ந்தாலும், ஊசியில் போட்டுக் கொண்டாலும் - எச்.ஐ.வி தொற்று அபாயத்தை விளைவிக்கிறது. ஹெராயின் ஊசிகள் மூலம் போட்டுக் கொள்ளுவதும், அடிக்கடி கொக்கெய்ன் பயன்படுத்துதலும், எச்.ஐ.வி அபாயத்தை அதிகப்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. போதை மருந்தை பெறுவதற்காக, பாதுகாப்பற்ற செக்சில் ஈடுபடுவதும், அபாயத்தை அதிகரிக்கிறது. க்ராக் பயன்படுத்துவது பல மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

## IV. தனிநபர் தடுப்பு நடவடிக்கை

அ) வாடிக்கையாளரிடம் எச்.ஐ.வி அபாயத்தை குறைக்க உதவும் வகையில் பேசுங்கள்.

ஆ) அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உதவுங்கள். அவற்றை கடைபிடிப்பதில் உள்ள சிரமங்கள் என்ன என்று கணித்து அதை எதிர் கொள்ள உதவுங்கள்.

இ) ஆணுறை பயன்பாடுபற்றி சரியான தகவல்களை அளியுங்கள். ஒரு முறை பயன்படுத்திய ஆணுறையை மீண்டும் பயன்படுத்தக் கூடாதென கூறுங்கள்.

ஈ) கடந்த 6 மாதங்களுக்குள் நோய் தொற்றும் அபாயம் இருந்திருந்தால், மீண்டும் பரிசோதனை செய்து கொள்ளும்படி வலியுறுத்துங்கள்.

உ) தங்கள் துணைவர்களுடன் எச்.ஐ.வி. அபாயம் பற்றி பேச ஊக்கமளியுங்கள். துணைவர்களின் எச்.ஐ.வி அபாயம் நிலை எப்படி என தெரிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

இருவருக்குமே கடந்த காலத்திலோ, தற்போதோ அபாயம் இல்லை எனில், எச்.ஐ.வி தொற்ற வாய்ப்பு இல்லை.

## V. தகவல் அளித்தல்

வாடிக்கையாளர் படித்தவராக இருந்தால் எச்.ஐ.வி. எப்படி பரவுகிறது என்றும், அதை எப்படி தடுப்பது என்பது பற்றியும் எழுத்து மூலமான தகவல்களை கொடுங்கள். அபாயத்தை குறைப்பது பற்றி, போதை பழக்கம் உள்ளவர்கள் உட்பட அனைவருக்கும் தகவல்களை தரவும். எச்.ஐ.வி. கவுன்சிலிங் பரிசோதனைகளை பற்றியும் தகவல்கள் அளிக்கவும்.

## பரிசோதனைக்கு பின் கவுன்சிலிங் – செரோபாசிடிவ்

பரிசோதனை முடிவு பாசிடிவ் என்று வந்தால் அதை ஏற்பது மிகவும் கஷ்டம். வாடிக்கையாளர் சிரமத்தின் பிடியில் இருப்பார் அவரை எதிர் கொள்ள தயாராக இருங்கள் நெருக்கடியில் உள்ளவருக்கு உடனடி உதவி அளிக்க ஏஜென்சி கொள்கைகள் ஏற்றாற்போல இருக்க வேண்டும்.

### 1. பரிசோதனை முடிவு

முடிவை நேரில் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

அ) முடிவை தெரிந்தவுடன் கவுன்சிலிங் ஆரம்பிக்கவும்.

ஆ) முடிவை வாடிக்கையாளரிடம் காண்பிக்கவும்.

இ) அவர் அதை எதிர் கொள்ள நேர அவகாசம் தந்து, அவரது உணர்வுகள் / கவலைகளை வெளிப்படுத்த ஊக்கமளிக்கவும்.

ஈ) அவரது உடனடி கவலைகள் மீது கவனம் செலுத்தவும்.

## 2. பரிசோதனை முடிவை அவர் ஏற்க உதவுதல்

அ) ஆதரவான, ஊக்குவிக்கும் குரலில் பேசவும்.

ஆ) அவரது உணர்வுகளை எதிர்கொள்ள தயாராகவும் நம்பிக்கையின்மை, கோபம், குற்ற உணர்வு, மன உளைச்சல், வெறுப்பு, சாவு பற்றிய பயம் இதிலடங்கும்.

## நோயாளி கஷ்டத்திலிருந்தால்

- அவருடன் கூடவே இருந்து, அவர் சொல்வதை கேட்டு, நிலமைக்கேற்றப நடந்து கொள்ளவும்;
- பிரச்சனைகளை தீர்க்க உதவி செய்யவும்
- மற்ற நெருக்கடியான சூழல்களை எதிர் கொள்ளும் முறைகளை அடையாளம் காண உதவி செய்யவும்;
- நெருக்கடியை சமாளிக்கும் சேவைகளை பெறவும், தொலைபேசியில் தொடர்பு கொள்ள நம்பிக்கையான இடத்தை கூறவும்.
- முடிவு தெரிந்த 48 மணி நேரத்திற்கு எப்படி அதை எதிர் கொள்கிறார். அவர் உணர்வு நிலை பற்றி விவாதிக்கவும்.
- பரிசோதனைக்கு முன்பான அமர்வில் விவாதித்த ஆதரவு சேவை பற்றி அவளுக்கு நினைவூட்டுங்கள். குடும்ப உறுப்பினர், நண்பர், வேறு நபர்

என யாரிடம் இது பற்றி பேச முடியும் என கேளுங்கள். அந்த நபரை குறிப்பிட்டால், அவருடன் எப்படி பேசுவது என்றும், அதன் விளைவு பற்றியும் விவாதிக்கவும்.

இ. ஆதரவு சேவை அளிப்போரை பரிந்துரை செய்யவும்.

## 3. முடிவு பாசிடிவ் என்பதன் அர்த்தம்

பரிசோதனையில் எச்.ஐ.வி கிருமி உள்ளது எனத் தெரிகிறது.

அ) பாசிடிவ் முடிவு என்பது;

1. எச்.ஐ.வி தொற்றியுள்ளது. கிருமிகள் உற்பத்தி ஆகின்றன.

2. கிருமி ஆக்டிவ் என்பதால் மற்றவருக்கு தொற்றும் வாய்ப்பு உள்ளது.

ஆ) பாசிடிவ் முடிவு என்பதால் அவருக்கு எய்ட்ஸ் உள்ளது என்று அர்த்தமில்லை.

## 4. தொடர் மருத்துவ சிகிச்சை

அ. உடனடியாக சிகிச்சை பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

1) பரிசோதனை மூலம் எதிர்ப்பு சக்தி எப்படி உள்ளது எச்.ஐ.வி. தொடர்பான தொற்றுகள், புற்றுநோய் உள்ளதா என கண்டுபிடிக்கலாம்.

2) எச்.ஐ.வி. பரவுதலை குறைக்கவும், வேறு தொற்றுகளை தடுக்கவும் சிகிச்சை உள்ளது.

ஆ. மருத்துவ மதிப்பீடு பற்றி விளக்கவும். அதில் ;

1) மருத்துவ மற்றும் தனிபட்ட தகவல் பின்னணி;

2) உடல் பரிசோதனை;

3) எதிர்ப்பு சக்தி செயல்படும் முறை;

4) எஸ்.டி.ஐ, காசநோய் போன்ற மற்ற தொற்றுகளுக்கான பரிசோதனை ஆகியவை அடங்கும்.

இ. நல்ல ஆரோக்கியமான பழக்கங்களை பின்பற்ற வலியுறுத்தவும்.

ஈ. தொடர்ந்து செக்அப் செய்து கொண்டு, சிகிச்சை பெறுதல், புதிய மருத்துவ சிகிச்சைப்பற்றி தகவல் அறிதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும்.

உ. பாசிடிவ் முடிவு எனில் துணைவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. இருக்க வாய்ப்பு உண்டு.

இது வாடிக்கையாளரின் முதல் பரிசோதனை எனில், துணைவர், குழந்தைகளையும், பரிசோதனை செய்யும்படி கூறவும் அவர்களுக்கும் கவுன்சிலிங்கிற்கு பரிந்துரைக்கவும்.

வாடிக்கையாளருக்கு திருமணமாகி, மனைவி கர்ப்பமாக இருந்தால் அல்லது அப்போதுதான் குழந்தை பிறந்திருந்தால் அவரது மனைவியிடம் கூற வேண்டியவை:

1. தாயின் கிருமிகளுடன் குழந்தைகள் பிறக்கின்றன. எனவே தாய்க்கு எச்.ஐ.வி கிருமி இருந்தால், குழந்தைக்கும் பிறக்கையில் பரிசோதனை முடிவு பாசிடிவாக இருக்கும்.

2. தாய்க்கு தொற்று இருப்பின் குழந்தைக்கு இருக்கும் என்று கூற முடியாது. இருப்பினும் 230 - 50 சதம் குழந்தைகள் தொற்றுடன் பிறப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

3. குழந்தைக்கு தொற்று இல்லை எனில் 18 - 24 மாதங்களில் பரிசோதனை முடிவு நெகடிவாக இருக்க வேண்டும்.

4. தொற்று இருந்தால், குழந்தை பிறக்கும் போது பரிசோதனை முடிவு பாசிடிவாக இருக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு நெகடிவாக இருந்து, மீண்டும் பாசிடிவாக ஆகிவிடும். குழந்தையின் உடலிலேயே அப்போது கிருமிகள் உற்பத்தியாகி விடும்.

5. எச்.ஐ.வி. பற்றி நன்கு தெரிந்த மருத்துவரிடம் குழந்தை சிகிச்சை பெறுவது அவசியம். தாயின் தொற்றுபற்றி மருத்துவருக்கு தெரிந்திருக்க வேண்டும். குழந்தையின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

6. தாய்ப்பால் கொடுக்கும் / கொடுக்க இருக்கும் பெண்கள் எச்.ஐ.வி பற்றி தெரிந்த மருத்துவருடன் இது பற்றி விவாதிக்க வேண்டும்.

7. எதிர் காலத்தில் குழந்தை பெற்றுக் கொள்வதாக இருப்பின் அதைப் பற்றியும் மருத்துவருடன் விவாதிக்க வேண்டும்.

5. தொற்று பரவுதலை குறைத்தல்

வாழ்க்கையாளருக்கு எச்.ஐ.வி தொற்றுக்கான அடையாளம் / அறிகுறி இல்லை என்றாலும் அவர் மற்றவர்களுக்கு தொற்றச் செய்யலாம்;

- ஆணுறை அணியாமல் செக்ஸில் ஈடுபடுதல் அல்லது சரியாக ஆணுறை அணியாமலிருத்தல்.
- ஊசி மற்ற பொருட்களை பகிர்ந்து கொள்ளுதல்.

எச்.ஐ.வி சாதாரணமாக பரவுவதில்லை என்று விளக்கவும். வாடிக்யைாளரின் பழக்கத்தை யொட்டி, தொற்று பரவுதலை குறைக்கும் விதங்கள் பற்றி விவாதிக்கவும். மற்ற தொற்றுகளுக்கு ஆளாகாமல் தவிர்க்க உதவும் முறைகள்

கீழே தரப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் மற்றும் அவரது துணைவர்கள் இது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

எச். ஐ.வி சாதாரணமாக பரவுவதில்லை என்று விளக்கவும். வாடிக்கையாளரின் பழக்கத்தையொட்டி, தொற்று பரவுதலை குறைக்கும் விதங்கள் பற்றி விவாதிக்கவும். மற்ற தொற்றுகளுக்கு ஆளாகாமல் தவிர்க்க உதவும் முறைகள் கீழே தரப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் மற்றும் அவரது துணைவர்கள் இது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

அ) அபாயத்தை குறைத்தல்

1. வஜைனல், வாய்வழி, ஆசனவாய் புணர்ச்சியை தவிர்த்தால் எச்.ஐ.வியை தவிர்க்கலாம்.

2. ஆணுறை அணிவதன் மூலம் மேலே கூறப்பட்ட விதத்தில் செக்ஸில் ஈடுபட்டாலும் எச்.ஐ.வியை தவிர்க்கலாம். ஆணுறை அபாயத்தை குறைக்குமே தவிர, முழு பாதுகாப்பு அல்ல. ஆணுறையை எப்படி பயன்படுத்துவது என செய்து காண்பிக்கவும். ஒரு முறை பயன்படுத்திய ஆணுறையை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

3. பிறப்புறுப்பில் புண்கள் இருந்தால், வாய்வழி, பிறப்புறுப்பு புணர்ச்சி எச்.ஐ.வி. தொற்றும் அபாயத்தை அதிகரிக்கும்.

4. திருமாணவர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி விவாதிக்கவும். ஐ.யூடி. பயன் படுத்துவதன் விளைவுகளை கூறவும். கர்ப்பதடை மாத்திரைகள் தொற்றிலிருந்து பாதுகாப்பு அளிப்பதில்லை. மற்ற குடும்ப கட்டுப்பாடு சாதனங்களும் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பு தருவதில்லை.

ஆ) போதை பழக்கம் - அபாயம் குறைத்தல்

போதை மருந்தை ஊசி மூலம் போட்டுக் கொள்ளும் வாடிக்கையாளரிடம் அது பற்றி விவாதிக்கவும்.

1. ஊசியை பகிர்ந்து கொள்ளமலிருந்தால் தொற்றை தவிர்க்கலாம்.

2. ஊசி சுத்தமாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தவும் போதை பழக்கத்தை கைவிடச் சொல்லி, அதற்கான திட்டங்களில் சேர்ந்து கொள்ளச் சொல்லவும். கீழ்கண்ட பொருட்களை பயன் படுத்துவதை அவரும் அவரது துணைவரும் தவிர்த்து, பாதுகாப்பான செக்ஸில் ஈடுபடும்படி கூறவும்.

- மது
- மரியுவானா
- மயக்கமளிக்கும் பொருட்கள் (Downers)
- ஊக்கமளிக்கும் பொருட்கள் (Uppers) பொருட்கள் (Hallueinogens)
- கொக்கெய்ன் / க்ராக்
- ஹெராயின்

முகர்தல், ஊசி மூலம் போட்டுக் கொள்ளுதல் என கொக்கெய்ன் பயன்படுத்தப்படுகிறது. எப்படி இருப்பினும் எச்.ஐ.வி அபாயத்தை கொண்டது. ஹெராயினை விட ஊசி மூலம் கொக்கெய்ன் போடுவது எச்.ஐ.வி தொற்றுடன் இணைந்தது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், போதை மருத்துக்காக பாதுகாப்பற்ற செக்ஸில் ஈடுபடுவதும் அபாயத்தை அதிகரிக்கிறது.

## இ) கூடுதல் அபாயம் குறைத்தல்

எச்.ஐ.வி பாசிடிவாக உள்ளவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியவை :

1. யாருக்கும் ரத்த தானம், உறுப்புதானம், விந்துதானம், தாய்பால் தருவது கூடாது.

2. பல்துலக்கிகள், பிளேடுகள் மற்றும் ரத்தத்துடன் தொடர்பு உள்ள பொருட்கள் பகிர்ந்து கொள்ள கூடாது. இவை எச்.ஐ.வி தொற்றுக்கு காரணம் இல்லை என்ற போதும் இதை கடைபிடிப்பது நல்லது.

3. உடல் திரவம், ரத்தம் உள்ள இடம் அல்லது அவை சிந்தினால், சுத்தப்படுத்த வேண்டும்.

## ஈ) தனிநபர் (ரிஸ்க்) அபாயம் குறைத்தல் முறை

1. துணைவர்களிடம் இந்த அபாயத்தை குறைக்கும் நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க வேண்டும்.

2. அபாயம் குறைக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுவதில் உள்ள சிரமங்களை வாடிக்கையாளருடன் விவாதிக்கவும்.

3. கடினமான சூழலை எதிர்கொள்ள அவருக்கு உதவி செய்ய வேண்டும்.

# VI. தொடர் நடவடிக்கைக்கான தனிநபர் திட்டம் :

அ) மருத்துவ மற்றும் ஆதரவு சேவைகள்.

1. செரோபாசிடிவ் வாடிக்கையாளருக்கு மருத்துவ கவனிப்பு அளிக்கவும்.

2. அந்த பகுதியில் உள்ள பாசிடிவ் ஆதரவு குழுவிடம் பரிந்துரை செய்து ஆதரவு சேவைகளை பெற செய்யவும்.

3. போதை, மது மறக்கடிக்கும் திட்டங்களை பின்பற்றும்படி செரோபாசிடிவ் வாடிக்கையாளர்களை வலியுறுத்தவும்.

வாடிக்கையாளருக்கு சேவை அளிப்போரை அழைத்து உதவுவதுடன், நம்பிக்கையாக தொலை பேசி பயன்படுத்தும் இடத்தை தெரிவித்து உதவி செய்யவும்.

## ஆ. துணைவர்களின் கவனத்திற்கு கொண்டு வருதல்

எச்.ஐ.வி. பாசிடிவ் வாடிக்கையாளர்கள் தங்கள் துணைவரிடம் அதைப்பற்றி தெரிவிக்க வேண்டும்.

1. துணைவரின் கவனத்திற்கு கொண்டு வந்தாரா என்று கேளுங்கள்.
2. நேரிடையாக துணைவரிடம் கூறும்படி சொல்லுங்கள் எப்படி சொல்வது என்று உதவுங்கள்
3. முடிந்தால், துணைவர்களுக்கும் கவுன்சிலிங் மற்றும் பரிசோதனைக்கான ஏற்பாடு செய்யுங்கள் எச்.ஐ.வி. கவுன்சிலிங், பரிசோதனை பற்றிய தகவல்களை – வாடிக்கையாளர் படித்தவராக இருந்தால் – எழுத்து மூலம் கொடுங்கள்.
4. துணைவரிடம் எச்.ஐ.வி. எந்த நிலையில் உள்ளது என்பதை விளக்கி கூறுங்கள்.
5. பாசிடிவாக இருந்தால் மருத்துவ மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்கு அனுப்புங்கள்
6. உடனடியாக சிகிச்சைக்கு சென்றால் வேறு தொற்றுகளை தவிர்க்க இயலும்.
7. எச்.ஐ.வி. தொடர்பான அனைத்து விஷயங்களையும் அச்சடித்து வாடிக்கையாளரிடம் கொடுக்கவும்.

**பாரபட்சம்**

மற்றவர்களிடம் தான் ஒரு எச்.ஐ.வி பாசிடிவ் என்பதை கூறும் போது கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் பாரபட்சமாக நடத்தப்படலாம்.

## சுருக்கம்

வாடிக்கையாளரிடம் கவுன்சிலர் விவாதிக்க வேண்டியவை

1. எச்.ஐ.வி/ எய்ட்ஸ் அபாயம் பற்றி அனைத்து தகவல்கள்
2. எதற்காக பரிசோதனை செய்துகொள்ள விரும்புகிறார்?
3. தனக்கு தொற்று அபாயம் இருப்பதாக ஏன் நினைக்கிறார்?
4. எப்படி பரிசோதனை நடக்கிறது?
5. நெகடிவ் முடிவு என்பது என்ன?
6. பாசிடிவ் முடிவு என்பது என்ன?
7. யார் முடிவை அந்த நபரிடம் தெரிவிப்பது?
8. தனிநபர் செக்ஸ் ஆரோக்கிய வழிமுறை உருவாக்குதல் ?

பரிசோதனைக்குப்பின்

பரிசோதனைக்குப்பின் கவனம் செலுத்த வேண்டியவை

1. பரிசோதனை முடிவின் அர்த்தம்
2. முடிவை அவர் எப்படி எதிர்கொள்கிறார்
3. பாதுகாப்பான செக்ஸ், பாதுகாப்பாக ஊசி போடுதல்
4. தனது ஆரோக்கியத்திற்கு ஆதரவாக இருத்தல்
5. வாடிக்கையாளருக்கு ஆதரவு அளித்தல்
6. வாடிக்கையாளர் யாரிடம் தகவலை கூறுவார்
7. துணைவர்களிடம் கூறுதல்.

கவுன்சிலர்கள் சிறப்பாக செயல்பட வழிகாட்டுதல்

1. உங்கள் வீட்டு, அலுவலக எண்ணை தராதீர்கள்

2. சேவை பயனாளியை நேரத்தை கடைபிடிக்க சொல்லுங்கள். நேரத்தை சரியாக பயன் படுத்துங்கள்.

3. எக்காரணம் கொண்டும் பணமோ, பரிசு பொருட்களோ **வாங்காதீர்கள்.**

4. தனக்கு பொருத்தமான கவுன்சிலரை வாடிக்கையாளர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கவுன்சிலரை தனது வீட்டு உறுப்பினராக அவர் கருதக்கூடாது. அப்படி செய்தால் லைன் மானேஜருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். சேவை பெறுபவர் சேவை அளிக்கும் ஏஜென்சியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். ஏஜென்சி மூலம் தான் கவுன்சிலர் உதவுகிறார். எல்லைகளை மீறக்கூடாது.

5. குறித்த நேரத்தில் ஒருவர் வர இயலவில்லையெனில் லைன் மோனேஜரின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்.

6. சேவை பயனாளியிடமிருந்து பணம் கடன் வாங்கவோ, கடன் கொடுக்கவோ கூடாது.

7. சேவை பயனாளி சார்பில் கவுன்சிலர் எந்த ஆவணத்திலும் கையொப்பம் இடக்கூடாது இது எப்போதும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

8. லைன் மானேஜரைத் தவிர வேறு யாரிடமும் கவுன்சிலர், சேவை பயனாளி பற்றிய தகவல்களை தரக்கூடாது.

9. கவுன்சிலர் சேவை பெறுபவருடன் இரவு தங்கக்கூடாது.

10. கவுன்சிலர் சேவை பெறுபவருடன் / செக்ஸ் சைத்துக் கொள்ளக் கூடாது. அப்படி ஒரு கவர்ச்சி ஏற்பட்டால் லைன் மானேஜரிடம் உடனே கூறவேண்டும்.

11. கவுன்சிலிங்கின் போதோ அதற்கு முன்போ போதை மருந்து எதையும் கவுன்சிலர் பயன்படுத்தக்கூடாது. சேவை பெறுபவர் பயன்படுத்தினாலும் லைன் மனேஜரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

12. கவுன்சிலர் பணியின்போது மது அருந்தக்கூடாது.

13. கவுன்சிலர் மேலே கூறப்பட்டுள்ளவற்றை மீறினால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, பணி நீக்கம் செய்யலாம்.

14. சேவை பெறுபவரிடமிருந்து, உடல் தீரியாகவோ, வார்த்தை மூலமோ வன்முறையை சந்தித்தால், உடனே பணியை நிறுத்திவிட்டு, லைன்மானேஜரிடம் கூற வேண்டும்.

## ரகசியதன்மையை காப்பாற்றும் பிரகடனம்.

நான் .................... பணிபுரிகிறேன். இந்நிறுவனம் எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் செக்ஸ் ஆரோக்கியம் தொடர்பாக எம்.எஸ் எம்களிடையே பணிபுரிகிறது.

என் பணி தொடர்பாக, தனிநபர் பற்றிய தகவல்களை ரகசியமாக வைத்திருப்பேன். அத்தகவல்கள் செக்ஸ் பழக்கம் செக்சுவாலிடி எச்.ஐ.வி. நிலை, எய்ட்ஸ் பற்றிய பரிசோதனை, ஆரோக்கியம், சிகிச்சை, குடும்பம், நண்பர்கள் பற்றியதாக இருக்கும்.

இத்தகவல்கள் ரகசியமானவை என்று நான் புரிந்து கொண்டிருக்கிறேன். யாரிடமும், எந்த நிறுவனத்திடமும், ஏஜென்சி அனுமதியின்றி, இத்தகவல்களை வெளியிட மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

Date :

Print Name :

Signature :

*Produced by Naz Foundation International, 2003*